09.10.2025 MCOP No.65/2022

சாட்சி : PW 1 அஜித்குமார்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் கூறிய நிலையில் 1 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** இந்த விபத்திற்கு உட்பட்ட வாகனத்தில் எத்தனை பேர் சென்றோம் என்றால் நான், வாகன ஓட்டுநர் எனது அம்மா மற்றும் எனது அக்காவின் மகள் ஆகிய நான்கு நபர்களும் சென்றோம். வாகன ஓட்டுநர் நந்தகோபால் எனது உறவினர் என்றால் சரிதான். நந்தகோபால் திருப்பாலைக்குடி விஷேசத்திற்கு வந்திருந்தார் என்றால் சரியல்ல. விபத்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வாகனம் வந்தது என்றால் திசை தெரியாது இராமநாதபுரத்திலிருந்து தேவகோட்டை நோக்கி கார் வந்தது. சம்பவ இடத்தில் உள்ள ரோடு வளைவுகள் அற்ற நேரான ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 4.00 மணி இருக்கும். ஓட்டுநர் மது அருந்தி இருந்தாரா என்றால் மது அருந்தவில்லை. சாலை விதிகளை மதித்து மெதுவாகத்தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். நான் அந்த வாகனத்தில் வந்ததற்கு உறுதிபடுத்தும் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. வாகன ஓட்டுநர் அதிவேகமாகவும் , கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து பாலத்தில் மோதி விபத்து ஏற்படுத்தி இருந்தார் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் விஷேசம் முடிந்து மது போதையில் வாகனத்தை அதிக வேகமாக ஓட்டினார் என்றும் நாங்கள் அவரை மெதுவாக ஓட்டிச்சொல்லியிருந்தால் விபத்து ஏற்பட்டு இருக்காது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இரண்டு கால்களிலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு எலும்பு முறிவிற்காக

பிளேட் பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தற்போதுஎன்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் ஹோட்டலில் கேசியராக பணிபுரிந்து வருகிறேன். நான் சிகிச்சைக்கு பிறகு நல்ல நிலையில் இருக்கிறேனா என்றால் தற்போது வெளிநோயாளியாக சிகிச்சைப் பெற்று வருகிறேன். தற்போது சிகிச்சைப் பெறுவதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தரப்பில் ம.சா.ஆ.12 வது ஆவணமாக தாக்கல் செய்த மருந்து பில்கள் மிகைப்படுத்தி வாங்கியது என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது முற்றிலும் குணம் அடைந்துவிட்டேன் எனக்கு தற்போது சிகிச்சை தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இழப்பீடு தொகை கூடுதலாக கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.1ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு விதிகளை மீறி இருப்பதால் இழப்பீடு தொகை 1ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. எனது கூற்றுப்படி இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடந்ததால் இந்த எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.